# போர்வாள்

மதம் என்பது மக்களை மயக்கும் ஓர் பைசாசம்,

மக்கள் துயரம் அடைவதற்கும், நாட்டில் பல அநீதிகள் நிகழ்வதற்கும் மதங்களே காரணமாகும்.

கடவுளை நேசிப்பதைவிட மனிதர்களை நேசித்தலே சாலச் சிறந்தது.

—இங்கர்சால்


ஆசிரியர்கள் : காஞ்சி. மணிமொழியார்
மா. இளஞ்செழியன், B.A. (Hons)

திராவிடர்
வார வெளியீடு

தனி இதழ் அணா 1½
வெளி நாடு அணா 2

வாள் 2

சென்னை, திருவள்ளுவர் ஆண்டு 1980 வைகாசி 15
28—5—49 சனிக்கிழமை

வீச்சு 39





"உழவர்கள், தொழிலாளர்கள், பெண்மணிகள், மாணவர்கள் ஆகியோரை காங்கிரசில் சேர்ந்து அதைப் பலப்படுத்தும் படியாகக் கேட்டுக்கொள்ள வேண்டும் என்று டில்லியில் இந்த வாரம் கூடிய காங்கிரஸ் முக்கியஸ்தர்களால் முடிவு செய்யப் பட்டிருக்கிறது!"

**சுதந்தரத் திராவிடம் நமது பிறப்புரிமை**

# நியாயந்தானா நீர் கூறும்!

அருமை காங்கிரஸ் திராவிடரே, எங்கே இவ்வளவு அவசர அவசரமாகப் போகிறீர்? சட்ட சபைக்குத்தானே! சட்டசபை கூடுவதற்கு இன்னும் அதிக நேரமிருக்கிறதே—அதற்கா இதற்குள் புறப்பட்டு விட்டீர்? சற்றே இங்கு வாரும்—இரண்டே விநாடிகள், நான் சொல்வதைக் கேளும்—பிறகு, தாராளமாக நீர், போகுமிடம் செல்லும்!

இதோ ஒரு சிறு பட்டியல்! படித்துப் பாரும்!

1 டாக்டர் ராஜேந்திர பிரசாத்
2 பண்டித கோவிந்த வல்லப பந்த்
3 பி. விஸ்வநாத தாஸ்
4 ஜகத் நாராயணன் லால்
5 ஜோஹரிலால் ஜன்ஜேரியா
6 தாஸ்ரா சின்ஹா
7 கோவிந்த் தாஸ்
8 புருஷோத்தம்த ஸ் தாண்டன்
9 [illegible]லால் வ்யாஸ்
10 தேவ் ராஜ் சேதி
11 ப்ரபுல்லா கோஸ்வாமி
12 மௌலானா ஹிப்சுர் ரஹ்மான்
13 சோட்ராம் கித்வானி
14 அன்சார் ஹர்வானி
15 கோவிந்த் சாஹாய்
16 ஷிப்பன்லால் சாக்சேனா
17 ஜகந்நாத ராவ்

பட்டியல் முழுவதையும் படித்து விட்டீரா? மெத்தச் சரி! இந்தப் பட்டியலில் காணப்படும் பெயர்களை எதற்காகப் பொறித்திருக்கிறேன் தெரியுமா, அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி. இந்தக் கிழமை டேராடூனில் கூடி, இந்தியா காமன்வெல்தில் இருக்கத்தான் வேண்டும் என்று பண்டித நேரு செய்துள்ள முடிவை ஒப்புக் கொள்வதா இல்லையா என்ற மகத்தான விவாதத்தில் ஈடுபட்டபோது, அந்த [illegible] கலந்து கொண்ட கண்ணியம் மிக்க கனவான்கள் இவர்கள்!

இப்போது, இதோ, இந்தப் பட்டியலையும் படியும்! மேலே குறிப்பிடப்பட்ட ஒவ்வொருவரும் எந்த மாகாணம் அல்லது வட்டாரத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை வரிசைக்கிரமமாக அறிவிக்கிறது இந்தப் பட்டியல.

படித்துப் பாரும்!

1. பீஹார்
2. ஐக்கிய மாகாணம்
3. ஒரிசா
4. பீஹார்
5. அஜ்மீர்
6. பீஹார்
7. மத்திய மாகாணம்
8. ஐக்கிய மாகாணம்
9. கிழக்குப் பஞ்சாப்
10. கிழக்குப் பஞ்சாப்
11. அஸ்ஸாம்
12. ஐக்கிய மாகாணம்
13. தெரியவில்லை
14. ஐக்கிய மாகாணம்
15. ஐக்கிய மாகாணம்
16. தெரியவில்லை
17. தெரியவில்லை

இந்தப் பட்டியலிலே சோட்ராம் கித்வானி, சிப்பன்லால் சாக்சேனா, ஜகந்நாதராவ் ஆகிய மூவர் மட்டும் எந்த மாகாணத்தவர் என்பது குறிப்பிடப்படவில்லையே தவிர, காங்கிரஸ் திராவிட நண்பரே, சோட்ராம் கித்வானி, சிப்பன்லால் சாக்சேனா ஆகிய இருவரும் வடநாட்டவரே! ஜகந்நாதராவ் என்பவரும் அநேகமாக வடநாட்டவராகத்தான் இருக்க வேண்டும்.

இந்தியா, காமன்வெல்த்திலே இருப்பதா, இல்லையா, என்கின்ற பிரச்சினை இந்தியாவின் எதிர்காலத்தை உருவாக்கும் உயர்வு பெற்ற உன்னதமான பிரச்சினை! அவ்வளவு முக்யத்துவம் வாய்ந்த பிரச்சினையை அகில இந்திய காங்கிரஸ் விவாதிக்கிறது—விவாதிக்கும்போது மொத்தம், 17 பேர் அந்த விவாதத்தில் கலந்துகொண்டிருக்கின்றனர்—அந்தப் பதினேழு பேரும் வடநாட்டவராக இருக்கின்றனர்! தென்னாட்டவர், திராவிடர், தமிழர், அந்தப் பதினேழு பேரில ஒருவர்கூட இல்லை! முக்யத்துவம் வாய்ந்த பிரச்சினை விவாதிக்கப்படும்போதே அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியில் பேச ஒரு தென்னிந்தியருக்கு வாய்ப்புக் கிடைக்கவில்லையென்றால், வேறு சில்லுண்டிப் பிரச்சினைகள் விவாதிக்கப்படும் நேரத்தில் மட்டுமா கிடைத்துவிடப்போகிறது? ஒரு தென்னிந்தியர் (பட்டாபி) காங்கிரஸ் தலைவராக இருக்கும் நேரத்திலேயே இந்த வாய்ப்பு கிடைக்கவில்லையென்றால் வடஇந்தியர்கள் செங்கோல் ஓச்சும் மற்ற நாட்களிலா கிடைத்துவிடும்?

**17-ல் 17-ம் வடநாட்டவருக்கு!**
**17-ல் 0 தென்னாட்டவர்க்கு!**

இதைவிட அவமான நிலைமை காங்கிரஸ் திராவிடருக்கு வேறு எப்படி ஏற்படமுடியும்? ஒரு தென்னிந்தியர் அகில இந்திய காங்கிரஸ் தலைவராக வரவேண்டுமானால் அதற்கு 22 ஆண்டுகள் தேவைப்படுகிறது. 21 ஆண்டுகள் 21 வட இந்தியர் வரிசை வரிசையாக காங்கிரஸ் தலைவர்களாக இருந்த பிறகு, ஒருமுறை ஒரு தென் இந்தியர் அத்திபூத்தாற்போல தலைவராக வரமுடிகிறது—அதுவும் வட இந்தியர்களின் பலமான எதிர்ப்பிற்கிடையே! அதுபோலவே, அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியில் மிக முக்கியமான பிரச்சினை யொன்று விவாதிக்கப்படும்போது, அந்தப் பதினேழு பேரில் ஒருவர் கூட தென்னிந்தியராக இருக்க முடியவில்லை! இத்தகு நிலையில் காங்கிரஸ் இருப்பதால்தான், தோழரே, நாங்கள், காங்கிரஸ் என்பது வட இந்திய ஆதிக்க சபை என்று கூறுகிறோம். அப்படிக்கூறுவது வட இந்தியர்மீது எங்களுக்குள்ள வீண் துவேஷத்தின் விளைவு என்று காங்கிரஸ் திராவிடரே, உங்கள் தோழர்கள் எங்கள்மீது அபாண்டப் பழியை வீசுகின்றனர்! இப்படி நீங்கள் எங்களைத் தூற்றுவது நியாயந்தானா, நீரே கூறும்! ஏதோ எங்கள் முகதாட்சண்ணியத்திற்குக் கட்டுப்பட்டு, நாங்கள் கூறுவது நியாயந்தான் — எங்களைத் தூற்றுவதும் தவறுதான் என்று கூறிவிடவேண்டாம்! உம் கரத்திலே தந்திருக்கிறேனே இரண்டு பட்டியல்கள், அவற்றின் சாட்சியாகக்கூறும், நியாயந்தானா உம்மனோர் எம்மனோரைத் தூற்றுவது!

———

# பணம்தானே வேண்டும்? இதோ இருக்கிறது!

## ஆளவந்தார்களே! அள்ளிக்கொள்ளுங்கள்!

நாடாள வந்திருக்கும் நல்லறிவாளர்களைப் பார்த்து, மக்கள், எங்களுக்கு இன்னின்ன வசதிகள் வேண்டும் என்று எப்போதாவது கேட்டால், உடனே, மனம் இருக்கிறது வசதிகள் ஓராயிரம் செய்ய வேண்டுமென்று, ஆனால் பணம் தான் இல்லை, என்செய்வோம் பராபரமே என்று பராபரக் கண்ணியை வாசிப்பது, இந்நாளில், ஆளவந்தார்களுக்கு ஒரு வழக்கமான பொழுதுபோக்காக ஆகிவிட்டது. எந்த வசதியைக் கேட்டாலும், அந்த வசதி எவ்வளவு இன்றியமையாததாக இருந்தாலும், கேட்பவர்கள் எவ்வளவு பரிதாபத்துடன் கேட்டாலும், அந்தப் பரிதாபத்தில் எவ்வளவு வேதனையும் துக்கமும் தோய்ந்திருந்தாலும், கேட்கப்படும் வசதி செய்யப்படாவிட்டால் அதனால் விளையும் கேடு எவ்வளவு அதிகமாக இருந்தாலும், அது செய்யப்பட்டுவிட்டால் அதனால் நேரிடும் நன்மை எவ்வளவு சிறந்ததாக இருந்தாலும், கேட்கப்படும் எல்லா வசதிகளுக்கும் நாடாள வந்திருப்பவர்கள் அளிக்கும் ஒரே ஒரு பதில் பணம் இல்லை, பணம் இல்லை என்பதுதான்.

ஆயிரமாயிரம் கிராமங்களில் கல்விச் சாலைகளோ கிடையாது— ஊரில் உலவிடும் முதியவர்களோ நாட்டுப் பேர்வழிகள்—அரும்பி மலர்கின்ற இளங்கிள்ளைகளைபா து படிக்க வைக்கலாம் என்று அந்த முதியவர்கள் எண்ணினாலோ படிக்கவைக்கப் பள்ளிக்கூடம் இல்லை — தவிக்கிறார்கள் கிராமத்தார்—கிராமத்திற்கோர் பாடசாலை ஏற்படுத்தலாம் சர்க்கார் — ஏற்படுத்தலாம் என்பதென்ன, ஏற்படுத்தத்தான் வேண்டும்—ஆனால் ஏற்படுத்தத்தான் வேண்டும் என்று நாட்டு நலனில் அக்கறை உடையார் யாராவது ஆளவந்தார்களுக்கு அறிவுரை புகன்றுவிட்டாலோ சர்க்காருக்குச் சீற்றம் பிறந்துவிடுகிறது, ஏது எங்களிடம் எவ்வளவு பணம் என்று எகிறிக் குதிக்கத் தொடங்கிவிடுகின்றனர்!

தாலுக்காவுக்கொரு வைத்தியசாலை நிச்சயம் இருந்தாகவேண்டும், ஆனால் இன்றோ ஜில்லாவுக்கொரு நல்ல வைத்தியசாலை இருப்பதும் அரிதாக இருக்கிறது. நல்ல சர்க்கார் நாங்கள். என்று மார்தட்டிக் கூறிக்கொள்கிறீர்களே, எண்ணற்ற கிராமங்கள் மிகமிகச் சாதாரணமான வைத்திய வசதியும் இன்றித் தவிக்கின்றனவே, கிராம வைத்தியசாலைகள் சிலவேனும் ஏற்படுத்த முயலக் கூடாதா என்று ஆளவந்தார்களை யாராவது கேட்டால் அவர்கள், ஆம் ஆம் செய்யத்தான் வேண்டும் என்று கூறிக்கொண்டே தங்கள் கஜானாவைத் திறந்து காட்டுகின்றனர்—கஜானா காலி! பார்த்தீர்களா தம்பிகளா, பார்த்தீர்களா, நாங்கள் என்ன செய்ய முடியும் பார்த்தீர்களா என்று, சர்க்கார், உடனே சிந்துபாடத் தொடங்கிவிடுகின்றனர்!

எங்களூர் ஆற்றுக்குக் குறுக்கே பாலம் போடவேண்டும், எங்களூர் நெடுஞ்சாலையைச் சற்றே ஒழுங்கு பண்ணித் தரவேண்டும், எங்களூர் சேரிகளில் வீடு கட்ட உதவி வேண்டும், எங்களூரில் மின்சார சக்தி கிடைக்க வசதி செய்ய வேண்டும், எங்கள் ஊரில் ஏரி மராமத்து செய்யவேண்டும் என்று யார் எதைக் கேட்டாலும் சரி, சர்க்கார் உடனே "பணம் இல்லை" என்ற 'ரெடி மேட்' (Ready Made) பதிலை தாராளமாக எடுத்துத் தந்துவிடுகின்றனர்!

"நாங்கள்தான் சர்க்கார் இயந்திரத்தின் முக்கிய பகுதிகள்! நாங்கள்தான் காலைமுதல் மாலைவரை ஓயாது உழைத்து விட்டு, வீடு திரும்பும் வேளையிலும் வீட்டில் சென்று பார்ப்பதற்காக கத்தை 'பைல்' களை கைநிறைய வாரிக் கொண்டு செல்பவர்கள்! நாங்கள் தான், மந்திரிசபையின் திட்டங்களைத் தீட்டிக்கொடுப்பவர்கள்! நாங்கள்தான் மகத்தான சர்க்காரைத் தாங்கி நிற்கத் தோள் கொடுப்பவர்கள்! ஆனால் சம்பளந்தான் எங்கட்குக் கொஞ்சம் கூட்டிக் கொடுக்க வேண்டும்" என்று என். ஜி ஓ. க்கள் யாராவது கேட்டாலோ, "ஆமப்பா! நீங்கள் சொல்வது மெய்தானப்பா! ஓயாமல் உழைக்கிறீர்களப்பா, அதை இல்லையப்பா என்பார் இல்லையப்பா! அதிக சம்பளம் உங்கட்கு அவசியம்தானப்பா, ஆனால் பணம் தானப்பா எங்களிடம் கிடையாதப்பா" என்று அன்பொழுக, பதில் கூறிவிடுகின்றனர்!

ஆரம்ப ஆசிரியர்கட்கு அதிக சம்பளம் வேண்டுமா—கொடுக்கத் தான் வேண்டும், ஆனால் பணமில்லை! பஸ் தொழிலாளர்கட்கும் பல வசதிகள் செய்யப்பட வேண்டுமா—செய்யப்படத்தான் வேண்டும், ஆனால் பணமில்லை! பள்ளிக்கூடங்களுக்குத் தரப்படும் உதவித் தொகையை உயர்த்தித்தர வேண்டுமா—தரத்தான் வேண்டும் ஆனால் பணமில்லை! தமிழாசிரியர்களின் நிலையை உயர்த்த வேண்டுமா—உயர்த்தத்தான் வேண்டும் ஆனால் பணமில்லை! அணைக்கட்டுத் திட்டங்கள் பல தொடங்க வேண்டுமா—தொடங்கத்தான் வேண்டும் ஆனால் பணமில்லை, என்று இதுபோல, எதற்கெடுத்தாலும் பணமில்லை பணமில்லை என்று கூறுவதை ஒரு "கலை"யாகவே ஆக்கிவிட்டனர் சென்னை சர்க்கார்! கேட்பவர்கள் காது குடைச்சலெடுக்கும் அளவுக்கு, விண்ணப்பம் செய்பவர்கள் முகங்கள் கருத்துப்போகும் அளவுக்கு, பத்திரிகைகளில் இந்தச் செய்தியைப் படிப்பவர்கள் கண்கள் சலித்துப்போகும் அளவுக்கு, பணம் இல்லை என்ற பதில் மறுபடியும் மறுபடியும் எண்ணற்ற முறை தரப்பட்டிருக்கிறது இந்த ஆட்சியாளர்களால்!

ஆனால் உண்மையில் இந்த சர்க்காரிடம் பணம் இல்லையா? இருக்கிறது! ஆனால் வீணுக்கு இறைக்கப்படுகிறது! எனவே தேவைப்படும் செலவினங்களுக்குக் கிடைக்காமல் போகிறது.

இதோ ஒரு எடுத்துக்காட்டு!

கதர் ஆடை என்று பேசுகிறார்களே, அது, மனிதன், நாகரிகமான ஆடைகளை நெய்யத் தெரியாத காலத்திலே பயன் படுத்தி வந்த ஒரு பொருள்! இந்தக் காலத்திற்குத் துளியும் தேவையில்லாதது! கோணிச்சாக்குப் போல் இருக்கும் இந்தப் பொருளை, [illegible] என்ற பெயரால், ஒரு காலத்தில் மக்கள் எப்படியோ அதன் முரட்டுத்தனத்தையும் அசௌகரியமான

தோற்றத்தையும் சகித்துக்கொண்டு, அணிந்துகொண்டிருந்தார்கள் என்ற உண்மையை இக்கால இளைஞர்களுக்கும் வருங்கால சந்ததியினருக்கும் தெரிவிப்பதற்காக வேண்டுமானால், கதர், கண்காட்சிச்சாலையில் வைக்கப்படலாமே தவிர, மற்றப்படி, மக்களுடைய அன்றாட வாழ்க்கையில் உலவுவதற்கு, அதற்கு எத்தகைய தகுதியும் கிடையாது. மற்ற துணிகளைவிட, கதர், அழகிலே சிறந்ததும் அல்ல, மென்மையில் மிக்கதுமல்ல, நெய்வதற்கு எளிதானதுமல்ல, விரைவில் நெய்யக்கூடியதுமல்ல, உற்பத்திச் செலவு குறைந்ததுமல்ல, விற்பனை விலை தாழ்வானதுமல்ல! அழகான தோற்றங்களுடன், அரை விநாடி நேரத்தில், ஆயிரமாயிரம் கெஜங்களை, மில்களில், நெசவு இயந்திரங்கள் நெய்து தள்ளும் இந்தக் காலத்தில் கையாலே நூல் நூற்று, கையாலே துணி நெய்து, ஒரு நாளைக்கு ஒன்று அல்லது இரண்டு கெஜம் வீதம் உற்பத்தி செய்யும் கொடுமைக்கு மனிதர்களை உள்ளாக்கும் செயல் அர்த்தமற்றது; அவசியமற்றது; அநாகரிகமானது; மனிதப் பண்பு இல்லாதார் மட்டுமே செய்யக்கூடிய காரியம்கூட! இந்தியாவில் உள்ள எல்லா மக்களும் கதரையே உடுத்துவது என்று தொடங்கிவிட்டால், பிறகு, இந்தியாவில் உள்ள எல்லா மக்களும் ஆண்டுக்கு 4 மாதங்கள் நூல் நூற்கும் தொழில் ஒன்றைத் தவிர வேறு எதனையும் செய்தல் முடியாது. எனவே, கதர், காரியத்திற்குப் பயன்படாதது என்பதையும், மக்களின் ஆடைத் தேவையைப் பூர்த்தி செய்யச் சிறிதும் பயன்படாது என்பதையும், எந்தக் காலத்திலும் கதர் எல்லா மக்களுக்கும் துணி வழங்கும் நிலையை எய்துதல் நடவாது என்பதையும் நாம் விளக்கிக் கூறத் தேவையில்லை — கதர்பக்தர்கள் உட்பட சிறிதளவேனும் சிந்திக்கும் திறமை படைத்த எவரும் இதை எளிதில ஒப்புவர். இத்தகு நிலையில் கதர் வளர்ச்சிக்கு என்று செலவிடப்படும் ஒவ்வொரு பைசாவும் வீணுக்கு இறைக்கப்படும் பணமே என்பதை யார் மறுக்க முடியும்?

யாரும் மறுக்க முடியாது! யாரும் என்றால் சென்னை சர்க்கார்கூடத்தான் மறுக்க முடியாது! என்றாலும் சென்னை சர்க்கார், இந்த கவைக்குதவாத, காட்டுமிராண்டிக் காலத்துப் பொருளின் உற்பத்தியைப் பெருக்குவதற்காக, ஆண்டுதோறும் ஏராளமான பணம் செலவிடுகின்றனர். இந்த ஆண்டு பட்ஜட்டிலும், இதற்கு என்று தனியாக 16 லட்சத்து 60 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தொகை மட்டுமே அல்லாமல், கதர் வளர்ச்சி நிதி என்ற பெயரால், சர்க்கார், சென்ற சில ஆண்டுகளாக ஒரு நிதியை, உருவாக்கிக்கொண்டு வருகிறார்கள். ஆண்டுதோறும் இந்த நிதிக்கு, பட்ஜட்டிலிருந்து ஒரு பெருந்தொகையைச் சேர்க்கிறார்கள். இப்படியாக வளர்ந்துவந்த இந்த நிதி, இதுபோது ஒரு கோடியே முப்பத்திநான்கு இலட்சம் என்ற பிரம்மாண்டமான அளவை அடைந்திருக்கிறது. இவ்வளவு தொகையையும், சர்க்கார், உண்மையிலேயே, கதர் என்ற பாழுங் கிணற்றிலே இறைப்பது என்ற முடிவுக்கு வருவார்களானால், அது மிக மிக வருந்தத் தக்கது. இந்தத் தொகையை சர்க்கார், கிராமங்களுக்குப் பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்துவது, ஆஸ்பத்திரிகள் அமைப்பது, சாலைகள் போடுவது, ஏரி மராமத்துச் செய்வது என்பன போன்ற அவசியமான, உருவான, பலன் தரத்தக்க பணிகளுக்குப் பயன்படுத்தலாம்; பயன்படுத்த வேண்டும்; பயன்படுத்துவதுதான் அவர்களின் கடமை.

வெள்ளையர் ஆட்சி இந்தியாவில் இருந்தபோதாவது, கதரை அணிவது, அந்த துணிக்காக அல்ல; வெள்ளை ஏகாதிபத்தியத்தை எதிர்த்துநிற்கும் அறப்போர் வீரர்கள் நாங்கள் என்பதை எடுத்துக்காட்டுவதற்காக என்று கதர் பக்தர்கள் கூறி, கதர், கவைக்குதவாதது என்ற உண்மையை ஓரளவு மறைத்திருக்கலாம். ஆனால் இப்போது அந்தப் பதிலைக் கூறி அவர்கள் தப்பித்துக் கொள்வதற்கும் வழி இல்லை. வெள்ளையர் ஆட்சி இந்தியாவைவிட்டு வெளியேறி இரண்டு ஆண்டுகள் ஆகின்றன. எனவே எந்த வாதத்தின்படி பார்த்தாலும், கதர், இந்தக் காலத்திற்குத் தேவையில்லாதது— கண் காட்சிச் சாலை ஒன்றிற்கு மட்டுமே தகுதி வாய்ந்தது!

எனவேதான் சென்னை ஆளவந்தார்களுக்கு நாம் அன்புடனும் பணிவுடனும் தெரிவித்துக்கொள்ள விழைகிறோம், பணம்தானே வேண்டும் உங்களுக்கு பயன்மிகு செயல் பல புரிந்திட, இதோ கதருக்காக என்று குவித்து வைத்திருக்கிறீர்களே பணம் ஒரு கோடிக்கு மேல், அதிலே அள்ளிக் கொள்ளுங்கள் தேவைப்பட்ட மட்டும். கதர் இந்த விஞ்ஞான காலத்திற்குத் தேவையில்லாதது என்பதைத் தைரியமாகவே தெரிவித்துவிடுங்கள்; கதருக்காக இனி இந்த சர்க்கார் ஒரு பைசாவும் செலவிடாது என்பதையும் நாட்டுக்கு அறிவித்துவிடுங்கள். காங்கிரஸ் மேலிடம், இதுபோல நாம் அறிவித்துவிட்டால், பிறகு நம்மீது சீறி விழுமோ என்றெண்ணி அஞ்சிட வேண்டாம்! அந்த மேலிடத்து மகான்களுக்கும் தெரியும், கதர் செத்துப்போன ஒரு பொருள்—இனி அதற்கு யாராலும் உயிரூட்ட முடியாது என்னும் மகத்தான உண்மை!

**புரோகிதர் ஆட்சி** ★ **பாசறையின் புது வெளியீடு**

பன்னெடுங்காலமாக புரோகிதர்களின் கொடுமை எப்படி மக்கள் முன்னேற்றத்தைத் தடுத்துவந்திருக்கிறது என்பதை வரலாற்றுரீதியாக விளக்கும் அரிய புத்தகம்.

விலை அணா 8 தபாலில் அணா 9.

வணிகர்க்குத் தக்க கழிவு உண்டு.

**பகுத்தறிவுப் பாசறை**

பவழக்காரத் தெரு :: சென்னை 1.

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

பற்றினாள்! "இது தகாது! ஒழுங்கல்ல! மன்னன் மகள் நீ! பெற்றோர் அறியாத அனாதை நான்!"— கோபமும் வெறுப்பும் நிறைந்த குரலில் அவன் பேசினான்.

"காவலன் மகளானாலும் காதலுக்கு அடிமைதானே! உங்கள் மேல்......................"

"காமம் கொண்டிருக்கிறாய்! இது கூடாது!", என்று கூறிவிட்டு வேகமாக அவ்விடத்தை விட்டுச் சென்று விட்டான்.

நேற்றுமாலை நடைபெற்ற இந்த நிகழ்ச்சி அவள் மனக்கண் முன் வந்து நின்றது.

நீர் நிறைந்த கண்களோடு மேற்குத் திசையை நோக்கினாள்! செக்கர் வானம்! அழகும் பொருளும் நிறைந்த காட்சி!

"செக்கர் வானம்! எழிலின் எல்லை! ஒரு முறை பார்த்தவுடனே உள்ளத்தை அள்ளிக் கொள்ளும் உன்னத ஓவியம்! கைபுனைந்து இயற்றாக் கவின்பெறு வனப்பு! எத்தனை முறை பார்த்தால்தான் என்ன, எவ்வளவு நேரம் பார்த்துக்கொண்டிருந்தால்தான் என்ன, சற்றேனும் சலிப்புத் தோன்ற வேண்டுமே, அதுதான் இல்லை! இன்றைக்கெல்லாம் உட்கார்ந்து கொண்டு கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டே இருக்கலாம் போலிருக்கிறது — அவ்வளவு சுவையும் எழிலும் ததும்பிய அற்புத ஓவியமாக இருக்கிறது இச் செக்கர் வானம்! இருக்கிறது! ஆனால் இன்னும் எவ்வளவு நேரத்திற்கு இருக்கும் இந்த இன்ப ஓவியம்! இப்பொழுதே, அதோ, அந்த மூலையில், இருள் அரசன், தன் பயங்கரமான வாயைத் திறந்து கொண்டு வருகிறானே! இன்னும் சிறிது நேரத்தில் எங்கும் அவன் ஆட்சிதானே இருக்கும்! செக்கர் வானம்—பிறகு இருக்காதே! அவர் மேல் நான் கொண்ட காதல்—அதுவும் செக்கர் வானத்தைப் போன்றதுதானா? மறைந்து விடுமா? அய்யோ! என் வாழ்வை இருள் கவ்விக்கொள்ளுமா?" என்றெல்லாம் எண்ணி எண்ணி, வஞ்சி, கண்ணீர் சிந்திக் கதறி அழலானாள். உலகம் முழுவதும் ஒரே இருள் மயமாகத் தென்பட்டது அவளுக்கு!

திடீரென்று, கண்ணீரைத் துடைத்துக்கொண்டு எழுந்து உட்கார்ந்தாள்! "அன்றோர் நாள் காதல் பார்வையை வீசி, என் உள்ளத்தைக் கவர்ந்து சென்ற அவர், நேற்று, வலிய நானே சென்று என் காதலைத் தெரிவித்தும் ஏன் மறுத்துச் சென்றுவிட்டார்?" இந்த ஐயவினா அவள் உள்ளத்தில் எழுந்தது! எழுந்ததும் கண்ணீர் ஊற்று வற்றிவிட்டது! மங்கையின் மனதில், சிந்தனை, வேகவேகமாகச் சுழல ஆரம்பித்தது!

---

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

தெல்லாம் துலங்குவதாக என்று எந்த இறைவனாவது பண்டிதரின் கனவில் தோன்றி வரம் அருளி விட்டுச் சென்றிருக்கின்றனனா? அல்லது இஷ்டபூர்த்தி தாயத்து எதையேனும் தன் கையிலே கட்டிக்கொண்டிருக்கிறாரா பண்டிதர்? எந்த தைரியத்தைக் கொண்டு, இவர், ஆட்சிப் பீடத்தில் அமர்ந்து செங்கோல் சுழற்றிவந்த இந்த இரண்டு ஆண்டுகளாக சாதிக்காத காரியங்களை இனி வரும் மூன்று ஆண்டுகளில் நிச்சயம் சாதித்து விடுவேன் என்று பந்தயம் கட்டுகிறார்?

எந்தப் பிரச்சினையானாலும் மூன்று ஆண்டுகள் என்று பண்டிதர் பதிகம் பாடுவது எந்த தைரியத்தைக் கொண்டு என்பது நமக்குப் புரியவில்லை. உங்களிலாவது யாருக்கேனும் புரிகிறதா?

---


## நீங்கள் விரும்பும் புத்தகங்கள்!

| | ரூ. | அ. | | ரூ. | அ. |
|---|---|---|---|---|---|
| தமிழன் தொடுத்த போர் | 1 | 12 | கோகில ராணி | 1 | 0 |
| சித்திரபுத்திரன் | 0 | 6 | கம்பரும் வம்பரும் | 0 | 4 |
| புதியதோர் உலகு | 0 | 6 | திராவிடன்தான் | 0 | 10 |
| ஈரோட்டுப் பாதை | 0 | 6 | இராமாயணம் நடந்த கதையா | 0 | 3 |
| திராவிடன்தான் வேண்டாமா | 0 | 8 | பெண்கள் புரட்சி | 0 | 14 |
| விதிக்கு அடிமைத்தனம் | | 2 | பெண்கள் போராட்டம் | 0 | 6 |
| கி. பி. 2000 | 1 | 12 | சங்கிலிச்சாமி | 0 | 8 |
| உலக நாகரிகத்தில் தமிழர் பங்கு | 0 | 8 | பிள்ளையோ பிள்ளை | 0 | 6 |
| காரல் மார்க்ஸ் | 1 | 0 | பெரிய இடத்துப் பெண் | 0 | 8 |
| சிறந்த பேச்சாளர் | 1 | 0 | வாழ்க திராவிடம் | 0 | 4 |
| வீராயி | 1 | 4 | காதல் கடிதங்கள் | 0 | 3 |
| கொடு கல்தா | 0 | 8 | நல்ல பெண்கள் எப்படி இருப்பார்கள் | 0 | 3 |
| அம்பேத்கார் [வரலாறு] | 1 | 0 | முத்த மிடுவது தவறா | 0 | 3 |
| இந்தி பொது மொழியா | 0 | 8 | காதலை வளர்ப்பது எப்படி | | 3 |
| சிரிக்கும் வையம் | 0 | 4 | பெண்களும் வசியமும் | 0 | 4 |
| நரகாசுரப் படுகொலை | 0 | 12 | பெண்களிடம் ஆண்கள் விரும்புவது என்ன | 0 | 3 |
| வானொலியிலே | 1 | 0 | திராவிட இந்தியா | 1 | 0 |
| வாழ்க்கையில் வெற்றி | 2 | 8 | பெரியார் இராமசாமி | 1 | 12 |
| போர்வாள் நாடகம் | 1 | 4 | பழந்தமிழர் | 2 | 0 |
| காமாந்தகாரக் கடவுள் | 0 | 8 | பெரியார் பெருந்தொண்டு | | 8 |
| இந்துமத ஆபாசதரிசனி | 2 | 8 | மறுமலர்ச்சிக்கவிதைகள் | | 8 |
| தாழ்வு மனப்பான்மை | 0 | 12 | தமிழர் தன்மதிப்புப் பாடல் | | 6 |
| நாஸ்திகர் யார் | 0 | 6 | பெரியார் பொன் மொழி | | 3 |
| கவிஞர் விழா | 0 | 6 | அறிஞர் அண்ணாதுரை | 0 | 5 |
| இந்திய சோஷலிசம் | 0 | 12 | கடவுளால் ஆகாதது | 0 | 8 |
| இந்துமதம் தமிழர்மதமா | | 8 | பேசும் பிணம் | 0 | 8 |

**பகுத்தறிவுப் பாசறை**

பவழக்காரத் தெரு : : சென்னை 1

போர்வாள்

திருவள்ளுவர் ஆண்டு 1980 வைகாசி 15
28—5—49 சனிக்கிழமை

# எது எடுத்தாலும் ஆறணா!

## ஆறணா, சார், ஆறணா!

டம்ளர் வேணுமா—ஆறணா!
டபரா வேணுமா—ஆறணா!
கரண்டி வேணுமா—ஆறணா!
கருப்பு சல்லடை—ஆறணா!
மிட்டாய் பொட்டலம்—ஆறணா!
மிட்டாய் மேஜை—ஆறணா!
சொம்பு தவலை—ஆறணா!
கெம்பு மோதிரம்—ஆறணா!
எது எடுத்தாலும், ஆறணா!
ஆறணா, சார், ஆறணா!

இது, சென்னை சைனாபஜாரில், என்றைக்கு வேண்டுமானாலும், எவர் வேண்டுமானாலும் காணக் கூடிய காட்சி!

அழகான சிறு வண்டி! அதிலே டம்ளர், கூஜா, டபரா, கரண்டி, சல்லடை, ஊதுகுழல், பந்து, "சொம்பு தவலை", "கெம்பு" மோதிரம்—இப்படி, பல ரக சாமான்கள் வரிசை வரிசையாக அடுக்கப்பட்டிருக்கும்! அந்த வண்டியை, மெதுவாக, தள்ளிக் கொண்டே, வண்டி ஓட்டி, மேலே குறிப்பிட்டதைப் போன்ற வசன கவிதையை வீசிக்கொண்டு போவார்! பெரியவர்களும் சிறியவர்களும், ஆடவரும் மாதராரும் ஓடோடி வருவர், அதையும் இதையும் பார்ப்பர், எதையேனும் ஒன்றை வாங்குவர். வியாபாரம் மளமளவென நடக்கும்—வண்டிக்காரனின் பாட்டும் மடமடவெனக் கிளம்பும்—வண்டியில் கட்டப்பட்டிருக்கும் மணியும் கணகணவென ஒலிக்கும்—வண்டியும் அசைந்தசைந்து போகும்.

"எது எடுத்தாலும் ஆறணா"—எனவே இந்த வியாபாரத்தில் பேரத்திற்கு இடமில்லை!

பேரம் இல்லாத வியாபாரம்—ஆகவே பேரம் செய்யத் தெரியாதவர்கள் இந்த வியாபாரத்தைச் செய்யத் தொடங்கினால் அதிலே ஆச்சரியம் ஏதுமில்லை.

பண்டித ஜவகர்லால் நேரு இந்தியாவின் பிரதமர்! அவருக்கோ பேரம் செய்யத் தெரியாது! காமன்வெல்த் மாநாட்டிற்குச் சென்று திரும்பி வந்தவுடனே இதை அவரே கூறியிருக்கிறார்! "காமன்வெல்துக்கு உள்ளே இருக்கவேண்டும் அல்லது காமன்வெல்துக்கு வெளியே வந்துவிட வேண்டும்! இந்த இரண்டு வழிகள் இருப்பதுதான். எனக்குத் தெரியும்! எனவே இரண்டில் ஒன்றைத் தேர்ந்தெடுத்தேன் — காமன்வெல்துக்கு உள்ளே இருக்க முடிவு செய்தேன்! ஆனால் காமன்வெல்த்துக்கு உள்ளேயும் இராமல், வெளியேயும் வராமல், இரண்டிற்கும் நடுப்பட்ட ஓர் இடைவழி இருக்கிறது என்று சிலர் கூறுகிறார்கள், அந்த இடைவழியில்தான் நான் சென்றிருக்கவேண்டும் என்றும் கூறுகிறார்கள்! நான் வெளிப்படையாகவே சொல்லிவிடுகிறேன், எனக்கு அதுபோல வெல்லாம் பேரம் செய்யத் தெரியாது!"—பண்டிதர் இதுபோலப் பேசினார், அதுபோது!

பேரம் தெரியாது பண்டிதருக்கு! எனவேதான், பேரமே தேவையில்லாத வியாபாரத்தைத் தொடங்கியிருக்கிறார் — எது எடுத்தாலும் ஆறணா என்று கூற ஆரம்பித்திருக்கிறார்!

ஆச்சரியமாக இருக்கிறதே, இலட்சாதிபதி மோதிலாலின் புத்திரரா இந்தக் கேவலம் எது எடுத்தாலும் ஆறணா வியாபாரத்தைத் தொடங்கியிருக்கிறார் என்று கேட்கத் தோன்றும் உங்களுக்கு! ஆச்சரியப்படாதீர்கள் நண்பர்களே, சாட்சாத் மோதிலால் புத்திரர்தான் இந்த வியாபாரத்தைத் தொடங்கியிருக்கிறார்! எது எடுத்தாலும் ஆறணா என்று பாடத் தொடங்கியிருக்கிறார்!

"போர்வாள்" ஏடு இந்தச் சேதியைக் கூறினால் நாங்கள் நம்ப மாட்டோம், பண்டித நேருவைத் தாக்கித் தாக்கி நாத்தழும் பேறிய நாத்திக ஏடு "போர்வாள்", எனவே பண்டிதரின் புகழ் பரப்பும், புனித ஏடுகள் எவற்றிலேனும் இச் சேதி வந்துளதோ கூறீர் என்கிறீர்களா? கூறுகிறோம் கேண்மின், "பாரததேவி" உண்டல்லவா அல்லும் பகலும் அலகாபாத் பண்டிதரின் அரும்புகழை ஒலிபரப்பும் ஏடு, அந்த ஏட்டிலே வந்திருக்கிறது இந்த விசித்திரத் தகவல்!

உண்மையாகவா என்பீர்கள்! உண்மையாகத்தான்!

மெய்யாகவா என்று கடாவுவீர்கள்! மெய்யாகத்தான்!

ஐயமிருந்தால் பாரததேவி 23-5-49 இதழை வாங்கிப் பாருங்கள், முதல் பக்கத்திலேயே முத்தான எழுத்துக்களாலே பொறிக்கப்பட்டிருக்கும் இந்த மாணிக்கச் சேதி!

உண்மையாகத்தான் தோழர்களே, உண்மையாகவேதான், முதலமைச்சர் நேரு எது எடுத்தாலும் ஆறணா வியாபாரத்தைத் தொடங்கியிருக்கிறார்!

வேடிக்கைக்கு அல்ல, விளையாட்டிற்கு அல்ல, உங்களை வியப்புக் கடலிலே மூழ்கவைத்து திகைப்பாலும் திக்பிரமையாலும் ஏங்க வைப்பதற்குமல்ல நாம் இத் தகவலைக் கூறுவது, உண்மையை உங்களுக்கு உரைக்கவேண்டியது உண்மைப் பத்திரிகாசிரியர்களின் கடமை அல்லவா—எனவேதான் கூச்சமின்றிக் கூறுகிறோம் எழில் மிகு பண்டிதர் தொடங்கியுள்ளார்,

பேரமில்லா வியாபாரம் என்ற புதுவித சேதியை!

கேட்கக் கேட்க ஆச்சரியமாக இருக்கிறதே சேதி—எங்கே தொடங்கியுள்ளார் ஆறணு வாணிபத்தை என்று கேட்கிறீர்களா? சொல்வதற்குச் சிறிதும் தடையில்லை—வாணிபம் தொடங்கப்பட்டுள்ள இடம், டில்லியில் உள்ள அரசியல் அமைப்பு மன்றம்!

சுற்றி வளைத்துப் பேசுவானேன் செய்தியைச் சுருக்கமாகவே கூறிவிடுகிறோம், இந்தியாவின் முதலமைச்சர் பண்டித ஜவகர்லால் நேரு, 23-5-49 அன்று "பாரததேவி" தந்துள்ள தகவலின்படி, மே 22-ம் நாள், டில்லி அரசியல் அமைப்பு மன்றத்தில், பேரமில்லா வியாபாரத்தை, கனஜோராகத் தொடங்கியிருக்கிறார்!

* * *

"உணவுப் பிரச்சினை மனதை மருட்டும் அளவுக்குப் பயங்கரமானதாக இருக்கிறதா? பொறுத்துக்கொள்ளுங்கள் மூன்று ஆண்டுகள்! மூன்று ஆண்டுகளுக்குள் இந்த மகத்தான பிரச்சினையை முழுசாகத் தீர்த்து வைத்து விடுகிறோம்!"

"பாஞ்சால அகதிகளின் பிரச்சினை சர்க்காரின் பணப்பெட்டிக்கு மட்டுமன்றி, அந்த அகதிகளை ஏற்றுப் போற்றிப் பாதுகாத்துத் தீரவேண்டிய சென்னை முதலிய ஏனைய வட்டாரத்து மக்களுக்கும் தீராத தலைவலியாக இருக்கிறதா! கொஞ்சம் பொறுமை காட்டுங்கள்! மூன்று ஆண்டுகளுக்குள் அகதிகள் பிரச்சினையை அடியோடு ஒழித்துக் கட்டிவிடுகிறோம்!"

"முதலாளிகள், உற்பத்தியைப் பெருக்க முடியாது என்று சொல்லாமல் சொல்லி, அடம் சாதிக்கிறார்களா—கிடக்கிறார்கள் அக் கெடுமதியாளர்கள்! மூன்று ஆண்டுகள் பொறுத்துக் கொண்டிருங்கள் அந்தப் பணப்பெட்டிகளின் பொல்லாங்குகளை! பிறகு பொடிப் பொடியாக்குகிறேன் அன்னவர் தம் சூழ்ச்சிகளை!

"இருக்க இல்லம் இல்லை, உடுக்கக் கந்தையில்லை, உண்பதற்கோ உணவும் இல்லை என்று துடிதுடிப்புடன் கூறி துக்க அந்தாதி வாசிக்கிறார்களா ஏழைப் பாட்டாளிகள், கொஞ்சம் பொறுத்துக் கொள்ளச் சொல்லுங்கள் மூன்று ஆண்டுகள் அவர்களை! பிறகு எல்லாம் சரிப்பட்டுவிடும்; சரிப்படுத்திடுவோம் நாங்கள்."

"மொழிவழி மாகாணங்கள் அமையவேண்டும் வேண்டும் என்று மக்கள் போர் முரசு கொட்டுகிறார்களா—தயவு செய்து சும்மா இருக்கச் சொல்லுங்கள், மூன்று ஆண்டுகளில் அவர்களுடைய இலட்சிய முழக்கத்தை நிறைவேற்றி வைத்துவிடுகிறேன்!"

"வடபுறத்து எல்லையில், காஷ்மீர் பிரச்சினை, மீண்டும் மீண்டும் தன் தலையை எழுப்பி, கண்களை உருட்டி மிரட்டி, பார்ப்பவரைப் பயங்கர உணர்ச்சிக்கு உள்ளாகுமாறு செய்து கொண்டிருக்கிறதா—இருக்கட்டும் இருக்கட்டும், மூன்று ஆண்டுகள் எப்படியாவது இருக்கட்டும், பிறகு பாருங்கள் அந்தப் பெரிய பிரச்சினையை எவ்வளவு சாமர்த்தியமாகத் தீர்த்து வைத்துவிடுகிறேன் நான் என்னும் அற்புதமான உண்மையை!"

"சோஷியலிஸ்டுகள் ஒருபுறமும் கம்யூனிஸ்டுகள் ஒருபுறமும் இந்திய மக்களுக்குத் தொல்லை கொடுத்த வண்ணம் இருக்கிறார்கள் என்றுதானே கூறுகிறீர்கள்-தெரிகிறது தெரிகிறது எனக்கு—தெரியாமல் இல்லை! மூன்று ஆண்டுகள் போகவேண்டும், பிறகு, எல்லாப் பிரச்சினைகளையும் சிக்கலறத் தீர்த்துவைக்கப் போகிறேனே, அப்போது, இந்தப் பிரச்சினையை மட்டும் தீர்க்காமலா இருந்துவிடுவேன்!"

"லஞ்சமும் ஊழலும் அதிகார வர்க்கம் முழுவதும் நிரம்பி வழிகிறது—மந்திரிமார்கள் மீதே, காங்கிரஸ் மூக்யஸ்தர்களே, குறை கூறிக் கிண்டல் செய்து கெக்கலி கொட்டி ஏளனம் புரியும் நிலைமை ஏற்பட்டுவிட்டது—புனிதமான காங்கிரசின் பெயர்மீது தும்பும் தூசும் ஏராளமாகப் படியத் தொடங்கிவிட்டது—நிலைமை மிக மிக மோசமாகிவிட்டது—உடனடியாக, பரிகாரம் ஏதேனும் தேடப்பட்டே ஆகவேண்டும் இந்த லஞ்ச ஊழல் பிரச்சினைக்கு என்றுதானே சொல்லப் போகிறீர்கள்—சொல்ல வேண்டாம் அந்தச் சோகம் மிக்க செய்தியை! நானே அறிவேன் அதனை! மூன்று ஆண்டுகள்தானே பொறுக்கச் சொல்கிறேன், பிறகு அதனையும் தீர்த்துவிடமாட்டேனா?"

"உணவுப் பிரச்சினையா மூன்று ஆண்டுகளில் தீர்த்துவிடுவோம். லஞ்சப் பிரச்சினையா—மூன்று ஆண்டுகளில் தீர்த்து விடுவோம்! பிரிவினைப் பிரச்சினையா—மூன்று ஆண்டுகளில் தீர்த்துவிடுவோம்! தொழில்களை தேசிய மயமாக்கும் பிரச்சினையா—மூன்று ஆண்டுகளில் தீர்த்துவிடுவோம்! காஷ்மீர் பிரச்சினையா—அதனையும் மூன்றுண்டுகளில் தீர்த்துவிடுவோம்! இந்தப் பிரச்சினையாய் இருந்தால் என்ன, அந்தப் பிரச்சினையாய் இருந்தால் என்ன, எந்தப் பிரச்சினையாய் இருந்தாலும் மூன்றுண்டுகளில் தீர்த்துவிடுவோம்!"

"மூன்று ஆண்டுகள்! மூன்று ஆண்டுகள்! எந்தப் பிரச்சினையாய் இருந்தாலும் மூன்று ஆண்டுகள்!"

பண்டிதர், இந்தத் தோரணையில் பேசி இருக்கிறார் அரசியல் அமைப்பு மன்றத்தில்—22-5-49 அன்று!

* * *

இப்போது கூறுங்கள் நண்பர்களே, மோதிலால் குமாரர், 'எது எடுத்தாலும் ஆறணு' வியாபாரம் தொடங்கியிருக்கிறார் என்று நாம் தொடக்கத்தில் கூறினோமே, அது தவறு?

எது எடுத்தாலும் ஆறணு என்று வண்டியோட்டிய வண்ணம், வியாபாரி, வசன கவிதை பாடுவதற்கும் எந்தப் பிரச்சினை தீரவேண்டுமானாலும் மூன்றுண்டு என்று, முதலமைச்சர் பதவியை உருட்டிய வண்ணம், பண்டிதர், பொறுப்பைத் தட்டிக் கழிக்கும் பாவனையில் பேசுவதற்கும் ஏதேனும் வேற்றுமை இருக்கிறதா?

* * *

எந்தப் பிரச்சினையாய் இருந்தால் என்ன, மூன்று ஆண்டுகளுக்குள் தீர்த்துக் கட்டிவிடுகிறேன் என்று முரசு கொட்டுகிறாரே பண்டிதர் நேரு, மூன்று ஆண்டுகள் என்பது என்ன கணக்கு? அடுத்து வர இருக்கும் மூன்று ஆண்டுகளில் இந்தியசர்க்கார் எந்தப் பிரச்சினையைத் தீர்க்க எண்ணினாலும் வெற்றிப்பெற்று விடுவர் என்று சர்க்காரின் ஜாதகத்தை சோதித்துப் பார்த்த ஆருடக்காரர் யாரேனும் கூறினரா? இனிவரும் மூன்று ஆண்டுகள் என்ன சர்க்காருக்கு 'சுக்கிரதசை'யா? அல்லது இந்த மூன்று ஆண்டுகளும் சேர்த்து ஒரு சுபபோக சுபதினமா இந்த சர்க்காருக்கு? அல்லது இந்த மூன்றுண்டுகளில் நீங்கள் தொட்ட

(5-ம் பக்கம் பார்க்க)

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

இருக்கிறீரே, நீர் என்ன தமிழ் மகன்தானா? ஆம் என்றால்—வெட்கம், வெட்கம்! இப்படி செந்தமிழை அவமானப்படுத்திய குற்றத்திற்கு முதலில் சென்று கழுவாய் தேடும். தமிழனல்ல—ஆரியன் என்றால் எங்கள் மொழியை இழித்துரைத்த குற்றத்திற்கு எங்களிடம் மன்னிப்புக் கேளும். பேராசைக்காரனடி **பார்ப்பான்** என்றும், **பார்ப்பானை** ஐயரென்ற காலமும் போச்சே என்றும் கவிஞர் பாரதியார் பாடியிருக்கிறாரே—அவர் வகுப்புத் துவேஷியா? பார்ப்பன மாந்தர்காள் பகர்வது கேண்மின் என்று **கபிலர்** கவிதை தீட்டியிருக்கிறாரே ஈராயிரம் ஆண்டுகட்கு முன்னால்—அவர் வகுப்புத் துவேஷியா? "அன்னாய்! வாழி வேண்டன்னை! நம்மூர்ப் **பார்ப்பனக்** குறுமகன் போலத் தாமும், குடுமித் தலைய, மன்ற நெடுமலை நாடன் ஊர்ந்த மாவே" என்று **ஐங்குறு நூறு** என்னும் சங்க இலக்கியத்தில் சங்க காலப் புலவர் ஒருவர் தீட்டியிருக்கிறாரே, அவர் வகுப்புத் துவேஷியா? இவர்கள் அனைவரும் வகுப்புத் துவேஷிகள் அல்ல என்றால், இவர்கள் அனைவரும் பார்ப்பனர் என்ற சொல்லைப் பயன்படுத்தியதால் வகுப்புத் துவேஷம் வளரவில்லை என்றால், இவர்கள் அனைவராலும் பயன்படுத்தப்பட்ட பார்ப்பனர் என்ற தனித்தமிழ்ச்சொல்லை நாங்கள் பயன்படுத்துவதால் மட்டும் வகுப்புத் துவேஷம் வளர்ந்துவிடும் என்று கூறுகிறீரேதோழரே, இது நியாயமா? நீரே கூறும்!

### 4. சென்ற இந்தி எதிர்ப்புப் போரில், அப்போது முதலமைச்சராக இருந்த ஆச்சாரியார் மாளிகைமுன் மறியல் நடத்தியதுபோல, பள்ளிக்கூடங்கள் விடுமுறையில் இருக்கும் இச்சந்தர்ப்பத்தில், சென்னைப் பிரதமர் மாளிகைக்கு முன் ஏன் மறியலைத் துவக்கி நடத்தக்கூடாது?

தனிப்பட்ட மனிதர்களின் இல்லத்தின் முன்னால் மறியல் செய்வது அவ்வளவு பொருத்தமானதல்ல. மேலும் பலரும், பலவிதமான, தவறான, பிரதமர் வீட்டுப் பெண்களை மறியல் தொண்டர்கள் இழிவாகப் பேசினார்கள் என்பதுபோன்ற பொய்யான குற்றச்சாட்டுகளை எழுப்ப நாமே இடங்கொடுத்ததுபோல் ஆகிவிடும். முன்னர், அன்பர் ஆச்சாரியார் இல்லத்தின் முன் மறியல் நடத்தப்பட்டபோதும், இப்படித்தான், சிலர், விஷமப் பிரசாரம் செய்தனர். உடனே, பெரியார் அவர்கள், இனி எக்காரணத்தை முன்னிட்டும், யாரும் தனிப்பட்ட மனிதர்களின் இல்லத்தின் முன்னில் மறியல் செய்யக்கூடாது என்று அறிக்கை வெளியிட்டு, விஷமிகளின் விபரீத வாதத்தை முளையிலேயே கிள்ளி எறிந்தார். இந்நாளிலும், அதுபோலவே, விஷமிகள், பொய்ப்பிரசாரம் செய்யத் தயங்கமாட்டார்கள். எனவே நீவிர் குறிப்பிடுவது போன்ற மறியல் தேவையில்லை. பள்ளிக்கூடங்கள் திறக்கப்பட்டதும்' திராவிடர் கழக நிர்வாகக் கமிட்டி கூடி, அறப்போரை, முன்போலவோ அல்லது 'வேறு தீவிரமான முறைகளைக் கொண்டோ நடத்த முடிவு செய்யும். அதுவரையில் மறியல் நடவாமல் இருப்பதால் தவறொன்றுமில்லை.

### 5. பூணூலை, விரும்புபவர்கள், அழகுக்காக அணிந்துகொண்டால்கூட, அதை நீங்கள் எதிர்க்கத்தான் செய்வீர்களா?

உங்களைப்போன்ற விசித்திரசித்தர்கள் யாராவது, இனி ஒருவேளை, பூணூலை, அழகுக்காக அணிந்துகொள்வார்களோ என்னவோ எனக்குத் தெரியாது, இன்றுவரை, பூணூலை அணிந்துகொண்டிருப்பவர்கள் யாவரும் **"எங்கள் சாதி ஒசத்தி"** என்ற சாதி அகம்பாவத்தைக் காட்டுவதற்காகத்தான் அதை அணிந்துகொண்டிருக்கின்றனர் — அழகுக்காக அல்ல! பூணூல் அணியும் "பிறவி உரிமை" பெற்றவர்கள் இருக்கிறார்களே அவர்கள் இரு பிறப்பாளர்களாம்! அதாவது. அவர்கள் மற்ற எல்லோரையும்போல பிறப்பது ஒரு பிறப்பாம்! பிறகு, அவர்கள், பூணூலை மாட்டிக்கொள்கிறார்களே, அப்போது அவர்கள் இரண்டாவது பிறப்புப் பிறப்பதாக அர்த்தமாம்! இப்படி இரண்டாவதாகப் பிறக்கும் உரிமை, பூணூலை அணியாத கூட்டத்தவர்க்கெல்லாம் கிடையாதாம்! இந்த இருமுறை பிறக்கும் பிரத்தியேக உரிமை தங்கட்கு இறைவனாலேயே தரப்பட்டிருக்கிறதாம்! அதற்கான அத்தாட்சிப் பத்திரம்தானாம் பூணூல்! இருபிறப்பாளர்கள் இதுபோலக் கூறிடுகின்றனர்! இந்த ஆணவ மனப்பான்மையின் சின்னமாக இருக்கிறது பூணூல் என்ற காரணத்தால்தான் நாங்கள் பூணூலை வெறுக்கிறோம்—மற்றபடி அழகுக்காக அது அணியப்படுமானால் யார்தான், அதை, ஏன் வெறுக்கப் போகிறார்கள்! சாக்கடை நீரை பரிமளப் பன்னீர் என்று சொல்லி, சிலர், அதைத் தம் தலைமீது தெளித்துக்கொண்டு அதன் நறுமணத்தையும் நுகர விரும்பினால் தாராளமாக நுகரட்டுமே எங்கட்கென்ன ஆட்சேபனை? அழுக்குப் பூணூலிலே அழகு தவழும் என்று சிலர் கருதி அணிவதானால், மெத்தச் சரி—அணிந்துகொள்ளட்டும், ஆனால், அழகு என்ற புல்புதருக்குள்ளே சாதி ஆணவம் என்ற நச்சுப்பாம்பு மறைவாக உலவுமானால் அதைமட்டும் அடித்துக்கொல்லாமல் நாங்கள் சும்மா இருக்கமுடியாது.

### 6. சென்ற மகா யுத்தத்தின்போது, காங்கிரஸ் கட்சியினர், வெள்ளை ஏகாதிபத்தியமே வெளியேறு என முழங்கினபோது, பெரியார் அவர்கள் ஏகாதிபத்தியத்தை ஆதரித்து யுத்த ஆதரவுப் பிரசாரம் செய்தது ஏன்?

பெரியார் அவர்கள் மட்டும் அல்ல, திராவிடர் கழகத்தைச் சேர்ந்த நாங்கள் எல்லோருமே தான், சென்ற உலகப் போரின் போது, போரை ஆதரித்துப் பிரசாரம் புரிந்தோம். ஆனால் நாங்கள் போரை ஆதரித்துத்தான் பிரசாரம் புரிந்தோமே தவிர ஏகாதிபத்தியத்தை ஆதரித்து அல்ல! **போர் வேறு! ஏகாதிபத்தியம் வேறு!** இதைப் பலரும் மறந்துவிடுகின்றனர். ஹிட்லர் தலைமையில் ஜெர்மன் நாசிகளும் முசோலினி தலைமையில் இத்தாலிய பாசிஸ்டுகளும் அகில உலகத்தையும் தங்கள் காலடியில் கொண்டுவந்து குவித்துவிடவேண்டும் என்ற பாசிச மனப்போக்குடன் மனித சமுதாயத்தின் மீது போர் தொடுத்தனர். ஹிட்

ரும் முசோலினியும் வெற்றி பெற்றிருந்தால், உலகத்தில், நாகரிகம் நசித்துப் போய் இருக்கும்; ஜனநாயகம் மாண்டுபோய் இருக்கும்; மனித சமூகத்தின் நல் இயல்புகள் யாவும் அழிந்துபோய் இருக்கும்; உலக மக்கள் யாவரும் இந்த இரு நச்சு நினைப்பினருக்கு அடிமைகளாகிவிட்டிருப்பர். இந்தக் கோரமான நிலை ஏற்படக்கூடாது ஹிட்லரும் முசோலினியும் முறியடிக்கப்பட்டே ஆகவேண்டும்—மனித சமுதாயம் காப்பாற்றப்பட்டே தீரவேண்டும் என்று உலகெங்குமுள்ள நல்லறிவாளர்கள் எண்ணினர்; நாங்களும் அது போலவே எண்ணினோம். எண்ணிய காரணத்தால், யார் யார் ஹிட்லர்—முசோலினி வெறியாட்டத்தை முறித்துத் தள்ள "தயார்" கூறி நிற்கிறார்களோ அவர்களுடன் எல்லாம் சேர்ந்து நிற்க வேண்டியது எங்கள் கடமை ஆயிற்று. பிரிட்டன், ஹிட்லர்—முசோலினி கும்பலை ஒழித்துக் கட்டுவதிலே முழுமூச்சுடன் ஈடுபட்டிருந்தது. எனவே பிரிட்டனுடன், அந்த நேரத்தில், ஹிட்லர்—முசோலினி—வெறியர்களை ஒழித்துக்கட்டும் அந்த அளவுக்குமட்டும், நாங்கள் ஒத்துழைப்பதென முடிவு செய்தோம்—தவறா? குற்றமா? இதற்குப் பெயர் ஏகாதிபத்திய ஒத்துழைப்பா? கூறலாமா நல்லறிவாளர்கள் இதுபோல?

"பிரிட்டனுக்கும் நமக்கும் போராட்டம் இருக்கிறது—உண்மை! பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் நம்மை மூன்று நூற்றாண்டுகளாக அடிமைப்படுத்தி கொடுங்கோலாட்சி புரிந்து வந்திருக்கிறது—உண்மை! இந்தக்கொடுங்கோலாட்சியை ஒழித்துக்கட்ட வேண்டியது நம் கடமையல்லவா—ஆம் ஆம் நம் கடமைதான், மறுப்பாரில்லை! ஆனால் பிரிட்டனுக்கும், நமக்கும் மட்டுமல்ல, மனித சமுதாயத்திற்கே பொது எதிரியாக இருக்கும் ஹிட்லர்—முசோலினி பேயர்களை வீழ்த்தவேண்டிய இந்த நெருக்கடியான நேரத்திலா, நாம், நமக்கும் பிரிட்டனுக்கும் இருக்கும் சொந்தப் போராட்டத்தைத் தொடங்குவது, நீதமா இது, ஆகுமா இந்தப்போக்கு, இப்படிச் செய்வது ஹிட்லருக்கும் முசோலினுக்கும் நாம் உதவி செய்வதாக அல்லவா முடியும்?" என்று கூறித்தான், நாம், உலகப்போர் மும்முரமாக நடந்து கொண்டிருந்த நேரத்தில் காங்கிரஸ்காரர்கள் தொடுத்த ஏகாதிபத்திய எதிர்ப்புப் போரைக் கண்டித்தோமே தவிர ஏகாதிபத்ய எதிர்ப்பேகூடாது என்ற காரணத்தால் அல்ல! பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஒழிப்புபோர் நடக்க வேண்டும் என்பதை நாங்கள் என்றும் மறுத்தது இல்லை. ஆனால் அந்தப்போராட்டத்தை ஹிட்லரின் இடுப்பு முறிந்த பிறகு வைத்துக்கொள்வதுதான் முறை என்று கூறினோம் — இதுவா தவறு? ஒரு பொது எதிரியை எதிர்த்து மும்முரமாகப் போராடுகின்ற நேரத்தில், நம்மைப் போலவே, நம் பக்கத்தே இருந்து, அந்த எதிரியுடன் போராடுகின்ற மற்றொருவனை ஆதரிப்பது சரியா? அல்லது இந்த மற்றொருவனுக்கும் நமக்கும் இருக்கின்ற சொந்தச் சண்டையை அந்த நேரத்திலே அங்கு வைத்துக் கொண்டு, அதன் மூலம் நம் பொது எதிரிக்கு அதிக பலம் தரும் விதத்தில் நடப்பது சரியா? எது சரி? நாங்கள் செய்த யுத்த ஆதரவுப் பிரசாரம் ஏகாதிபத்திய ஆதரவுப் பிரசாரம் அல்ல என்பது, கேள்விகேட்ட நண்பரே, உமக்கு, இப்போதாவது புரிகிறதா? புரியவில்லையானால் ஓய்வாக இருந்து சிந்தித்துப் பாருங்கள்—ஒழுங்காகப் புரியும்.

**7. நம் தமிழில் இருப்பனபோன்ற உயரிய இலக்கியங்கள் இந்தியில் ஒன்றேனும் இல்லை என்று திரு. வி. க. முதலான தமிழ் அறிஞர்கள் கூறுகின்றனரே, இலக்கியம் என்றால் என்ன பொருள்? எவ்விதங்களில் அது இந்தி மொழியில் இல்லை?**

தினம்தினம் பல புத்தகங்கள் அச்சாகி வெளிவந்து கொண்டே இருக்கின்றன. இவற்றில் சில, சிலநாட்களிலேயே மறைந்துவிடும். வேறு சில, பத்தோ இருபதோ ஆண்டுகள் உலவி பின்னர் மறைந்துவிடும். இன்னும் சில நூறு அல்லது இருநூறு ஆண்டுகள் இருந்து மறைந்துபோகும். ஆனால் இரண்டொரு நூல்கள் மட்டும் எத்தனை நூற்றாண்டுகளானாலும் மறையாமல் இருந்து, தம் மங்காத புகழ் ஒளியையும் அறிவு ஒளியையும் வீசிக்கொண்டிருக்கும். இத்தகைய இறவாத புகழுடைய ஒப்பற்ற நூல்களுக்குத்தான் இலக்கியங்கள் என்று பெயர். தொல்காப்பியம், தமிழ் மொழியில் உள்ள இலக்கியங்களுக்குள்ளே மிகப் பழைய இலக்கியம். இந்நூல் எழுதப் பெற்று ஐயாயிரம் ஆண்டுகள் ஆயின என்கிறார் பேராசிரியர் மறைமலை அடிகளார். ஐயாயிரம் ஆண்டுகளுக்குப் பிறகும், இந்த நூல், தமிழகத்தில் தன் புகழ் குன்றாது உள்ளது எனில் இதன் சிறப்பை விளக்க வேறு சொல் ஏதும் கூறல் மிகை. திருக்குறள், சிலப்பதிகாரம், புறநானூறு, அகநானூறு, கலித்தொகை, நற்றிணை, பத்துப்பாட்டு முதலியன ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் தமிழகத்தில் தோன்றி இன்றுவரை தம் எழில் சிறிதும் மங்காது விளங்கும் முழு மாணிக்கங்கள். கால வெள்ளத்தைக் கடந்து நிற்கும் இத்தகைய பெருநூல்கள் இந்தி மொழியில் ஒன்றுகூட கிடையாது. தமிழ்ப் பெரியார் திரு. வி. க. போன்றவர்கள் இந்தி மொழியில் சிறந்த இலக்கியம் ஒன்றேனும் இல்லை என்று முழக்கமிடும்போது குறிப்பிடுவது இந்த உண்மையைத்தான். இந்த உண்மையை எந்த அவிஞசியார்களும் இதுவரை மறுத்தது கிடையாது—மறுப்பது முடியாது!

**8. அறிஞர் அண்ணாதுரை அவர்களால் தீட்டப்பட்டுள்ள "ஆரிய மாயை"யை தடைசெய்யப்போவது உண்மையா?**

இளஞ்செழியன் காங்கிரஸ் மந்திரி அல்ல, இந்தக் கேள்விக்குப் பதில் கூற! யாராவது எம். எல். ஏக்கள் தங்கட்குத் தெரிந்திருந்தால், அவரை, இதே கேள்வியை சட்டசபையிலே கேட்கச் சொல்லுங்கள்—சரியான பதில் கிடைத்துவிடும்.

**ஏஜண்டு தேவை:**

**தஞ்சாவூருக்கு**

பிரதிக்கு 12 அணா வீதம் முன்பணம் கட்டக்கூடிய ஏஜண்டு உடனே தேவை.

மேனேஜர், போர்வாள்.

# ஏன்? எப்படி? எதற்காக?

★

## கேள்வியும் விடையும்

★

[ இளஞ்செழியன் ]

**1. பீகார் மாகாணத்தில் இந்தி எதிர்ப்புப் போர் நடக்கின்றதே, அங்குள்ள இந்தி எதிர்ப்புத் தலைவர்களோடு நமது இந்தி எதிர்ப்புத் தலைவர்களும் சேர்ந்து ஒரு ஐக்கிய முன்னணி ஏற்படுத்திக்கொண்டு இந்தியை எதிர்த்தால் விரைவில் இந்தி எடுபடுமல்லவா?**

பீகார் வாசிகளின் இந்தி எதிர்ப்புப் போராட்டம் பீகாரில் கட்டாய இந்தியைத் திணிக்க முயலும் பீகார் சர்க்காரை எதிர்த்து நடத்தப்படுவது. நமது இந்தி எதிர்ப்புப் போர் சென்னை மாகாணத்தில் இந்தியை நுழைக்கும் சென்னை சர்க்காரை எதிர்த்து நடத்தப்படுவது. பீகார்வாசிகளின் போராட்டத்தின் காரணமாகப் பணிய வேண்டியவர்கள் பீகார் சர்க்கார். நமது போராட்டத்தின் காரணமாகப் பணிய வேண்டியவர்கள் சென்னை சர்க்கார். கட்டாய இந்தி கூடாது என்ற பொது நோக்கத்தில் பீகார் இந்தி எதிர்ப்பாளர்களும் நாமும் ஒத்த கருத்துடையவர்களே என்றபோதிலும், இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக அவர்களால் பணிய வைக்கப்பட வேண்டிய சர்க்காரும் நம்மால் பணியவைக்கப்பட வேண்டிய சர்க்காரும் வேறு வேறாக இருக்கும் காரணத்தால், நம் இருவருக்குமிடையே ஓர் ஐக்கிய முன்னணியை ஏற்படுத்திக் கொள்வது தவறு. அப்படியே ஏற்படுத்தினாலும், அந்த ஐக்கிய முன்னணி சரிவரப் பணியாற்றுவது இயலாது. அப்படியே பணியாற்றினாலும் அதனால், உருவான பலன் எதுவும் கிட்டாது.

**2. புண்ணிய சீலர் காந்தி உயிருடன் இருந்தபோது, அவரை முழுக்க முழுக்க எதிர்த்துவிட்டு இப்போது, அவர் வீரசுவர்க்கம் எய்திய பிறகு, அவரை முழுக்க முழுக்கப் பாராட்டுகிறீர்களே, இது யாரை ஏமாற்ற?**

உத்தமர் காந்தியார் உயிருடன் இருந்தபோது அவரை முழுக்க முழுக்க எதிர்த்தோம் என்பதும் தவறு; அன்னார் "வீரசுவர்க்கம்" எய்திய பிறகு அவரை முழுக்க முழுக்கப் பாராட்டுகிறோம் என்பதும் தவறு. அப்போதும் நாங்கள் அவரைமுழுக்க முழுக்க எதிர்த்ததில்லை. இப்போதும் நாங்கள் அவரை முழுக்க முழுக்கப் பாராட்டவில்லை, காந்தியடிகளின் தியாகச் சிந்தையை, காந்தியடிகளின் அஞ்சாமைப் பண்பாட்டை, காந்தியடிகளின் உயர்ந்த ஒழுக்கத்தை, காந்தியடிகளின் செவ்விய வாழ்க்கையை, காந்தியடிகளின் புனிதத் தன்மையை அன்றும்தான் பாராட்டினோம்; இன்றும்தான் பாராட்டுகிறோம். ஆனால் அதே சமயத்தில் காந்தியடிகளின் கதர்த் திட்டம் கவைக்குதவாதது, தேவையற்றது, விஞ்ஞான ரீதியாக ஒப்புக்கொள்ள முடியாதது, பொருளாதார நுணுக்கம் தெரிந்தவர்களால் ஒதுக்கித் தள்ளப்படுவது என்று அன்றும் தான் கூறினோம்; இன்றும்தான் கூறுகிறோம். பிராமணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன், பஞ்சமன் முதலான எண்ணற்ற சாதிப் பாகுபாடுகளை உண்டு பண்ணி, இந்தியாவைப் படுகுழிக்கு இழுத்துச் சென்ற வர்ணாஸ்ரம தர்மத்தை காந்தியடிகள் ஆதரிப்பது தவறு, பெருந்தவறு, மாபெருந் தவறு என்று அன்றும்தான் கூறினோம்; இன்றும்தான் கூறுகிறோம். எல்லா மதத்தவர்களும் ஒருங்கே கலந்திருக்கும் அரசியல் அரங்கில் ஒரு மதத்தவர்க்கே உரிய இராம ராஜ்யம், ராம்துன் பஜனை, வந்தே மாதரம், உபவாசம், போன்ற கருத்துக்களை காந்தியடிகள் நுழைப்பது பிற மதத்தவர் மனதை வீணாகப்புண் படுத்தி விபரீத விளைவுகளுக்கு அச்சாரம் தரும் என்று அன்றும்தான் கூறினோம்; இன்றும்தான் கூறுகிறோம். இந்தியா முழுவதற்கும் இந்துஸ்தான் பொது மொழியாக இருக்க வேண்டும் என்று காந்தியடிகள் கூறுவது துளியும் பொருத்தமற்றது என்று அன்றும்தான் கூறினோம்; இன்றும் தான் கூறுகிறோம். ஆகவே காந்தியடிகளாரின் மறைவுக்குப் பிறகு, நாங்கள் ஏதோ எங்கள் கருத்துக்களை மாற்றிக் கொண்டோம் என்ற 'பாணி'யில் யாராவது பேசுவார்களானால் அது, அவர்கள் கருத்திலே ஏதோ கோளாறு இருக்கிறது என்பதைத்தான் காட்டுமே தவிர வேறொன்றுமில்லை.

**3. உங்கள் கட்சியினர் ப்ராம்மண குலத்தவரை பிராமணர் என்ற இழிசொல்லால் குறிப்பிட்டுப் பேசியும் எழுதியும் வருவது வீணாக வகுப்புத் துவேஷத்தை வளர்ப்பதற்குத்தானே பயன்படுகிறது—இது நியாயமா?**

**பிராமணர் என்பது வடமொழிச் சொல். பார்ப்பனர் என்பது தூய செந்தமிழ்ச் சொல்.** தமிழ் மொழியில் வந்து கலந்து தமிழின் எழிலையும் இன்பத்தையும் சிதைத்து அழிக்கும் வடசொற்களைக் களைந்தெறிந்து, இயன்றவரையில் தூய தமிழையே எழுதி, தூய தமிழையே பேசவேண்டியது தமிழனின் கடமை. எனவேதான் நாங்கள் பிராமணர் என்ற வடசொல்லை விலக்கி, பார்ப்பனர் என்ற தமிழ்ச் சொல்லைப் பயன் படுத்துகிறோம். ஆனால் நீர் கூறுகிறீர், இதுபோல வடசொல்லை விலக்கி தமிழ்ச் சொல்லைப் பயன்படுத்தினால் வகுப்புத் துவேஷம் வளரும் என்று! அப்படியென்றால், தமிழ் மொழியையே ஒரு வகுப்புத் துவேஷ மொழி என்பதாக நீர் கருதுகிறீர் என்று தெரிகிறது! என்ன ஆணவமய்யா உமக்கு இப்படி எங்கள் செந்தமிழை அவமானப்படுத்த! எங்கள் இனிய தமிழ்ச் சொல்லை, இழிசொல் என்றும், வட ஆரியர் தம் புன்சொல்லை அழகிய சொல் என்றும் மனம் துணிந்து எழுதி

(8-ம் பக்கம் பார்க்க)




தொடர்கதை :

நான்காம் பகுதி

## செக்கர்வானம்

ரண்மனையின் தலைவாயிலில் ட்டு மேளத்தின் எக்காளம்! ட்டை வாயிலில், நகராவின் க்கம்! குழலின் கீதம்! யாழின் னிசை!

ர மன்னன் சேந்தனும். அவன் பாரமும் வந்துகொண்டிருந்த சியை, உப்பரிகையில் நின்று ண்டு அரசி சேயிழையும் இள வஞ்சியும் கவனித்துக் கொண் தனர்.

வட்டைக்குக் காலையில் சென்ற தர், மாலை வந்தும் ஏன் இன் வரவில்லை என்றெண்ணி ம் ஏக்கமும் கொண்டிருந்த யின் உள்ளத்தில், அக் காட்சி புத் தேனைச் சுரக்கச் செய்

க ஏறுபோல் நடந்து வரு சிந்தையும் அங்கமும் சிலிர்க் சங்கத் தமிழ்ப் பார்வையை மீது வீசுவார் என்றெல்லாம் மணியின் வருகையை எதிர் கி இளவரசி வஞ்சி மகிழ்ச்சி னத் துடிப்பும் கொண்டாள்! ன்னிற நெற்றியில் புரண்டு ந்து கொண்டிருந்த சுருள் மேல் ஏற்றினாள்! முகத்தில் பிய வியர்வையைத் துடைத் கொண்டாள்! முத்து வடத் தடவிக் கொடுத்தாள்! து மலரைக் கூந்தலில் து பொருத்தினாள்! நெகிழ்ந்த பட்டாடையைச் சரிபார்த்

கள் புடைசூழவந்த அரசன் வாசலைத் தாண்டி அரண் மனைக்குள் நுழைந்தான். சேடிகள் பக்கம் வர, சேயிழையும் வஞ்சியும் சேர நாட்டதிபதியை வரவேற்றனர். மன்னன் முகத்தை அரசி தன் மலர்விழிகளால் தழுவினாள்! மற்றப் பக்கங்களில் இளவரசி தன் கயல் விழிகளை மேயவிட்டாள்! வஞ்சியின் வசீகர முகத்தில் ஏமாற்றத்தின் சாயல் சிறிது சிறிதாகப் படிய ஆரம்பித்தது!

சேந்தனும் சேயிழையும் உள்ளே சென்றனர். தயங்கி தனித்து நின்றாள், வஞ்சி. எங்கே அவர், எங்கே, என்று நொடிக்கு நூறுமுறை அவள் உள்ளம் அதே கேள்விமணியை ஓங்கியோங்கி அடித்தது! இதோ, இதோ தேடுகிறேன், விரைவில் தேடுகிறேன், வாடி வதங்கியுள்ள உள்ளத்தைப் பூரித்துப் பெருத்து விம்மச் செய்ய ஓடோடித் தேடுகிறேன் எள்று கூறி, வேல் விழிகள், எட்டியமட்டில் எந்தெந்தப் பக்கமோ துழாவித் துழாவிப் பார்த்தன! தூயமணி தென்படவில்லை! களித்துக் கூத்தாடக் காத்திருந்த உள்ளத்தில் கவலை கப்பிக் கொண்டது.

"வஞ்சி, உன்னை அப்பா அழைக்கிறாரே-கேட்கவில்லையா?" என்ற குரல் கேட்டதும், தன்னினைவு பெற்று தையல் திரும்பிப் பார்த்தாள்! அவளுடைய தோழி தேன்சுவைதான் அங்கு நின்று கொண்டிருந்தாள்!

"யாரை எதிர்பார்த்து வஞ்சி ஏமாந்து நிற்கிறாய்?" என்று அந்தப் பெண் அருகே வந்து குறும்பான குரலில் வினவினாள்.

"நீ கண்டாயாடி நான் எதிர்பார்த்து ஏமாந்ததை?"—கோபம் கொண்டவளைப்போல, வஞ்சி இதுபோலக் கூறிவிட்டு முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

"எனக்கேன் இந்த வீண் வம்பெல்லாம்! புத்தி, புத்தி! நான் வருகிறேன்!"

"சற்று நில்லடி!"

"ஏனோ?"

"இப்படி வாயேன்!"

"வராவிட்டால்?"

"கோபித்துக்கொள்வேன்!"

"ஆபத்து எனக்கு அதனால் வராதே?"

"சமயம் தெரியாமல் உளறுகிறாயே!"

"வேட்டைக்குச் சென்ற வீரர்களெல்லாம் திரும்பிவிட்டனரே, அவர் எங்கே காணோம் என்ற ஏக்கம்..."

"குறும்புக்காரியடி நீ! மெதுவாகப் பேசு! நலமாக அவர் திரும்பி இருக்கிறாரா, பார்த்துக்கொண்டு வாடி!"

"நல்லவேலையம்மா — என்னால் இது முடியாது!"

தூயமணி இருக்குமிடத்தைக் கண்டறிவதற்காக தேன்சுவை சென்றபிறகு, அவ்விடத்தை விட்டு இளவரசி உள்ளே சென்றாள். வாயிற்படியில் காலெடுத்து வைக்கப் போகும்போது, தாயும் தந்தையும் தூய மணியைக் குறித்துப் பேசிக்கொண்டிருப்பதைக் கேட்டதும், தயங்கி நின்றாள். அவர்கள் தன்னைப் பார்க்கவில்லை என்பதை அறிந்ததும், உள்ளே நுழையாமல் ஒரு பக்கமாக ஒதுங்கி நின்றாள். அவர்கள் என்ன பேசுகிறார்கள் என்பதை ஒன்றுவிடாது அறிய காதை அப் பக்கமாகத் திருப்பினாள் கன்னி!

"எதற்காக அவனை அனுப்பினீர்கள்?"

"அழகிய மான்குட்டி யொன்று அப் பக்கமாக வந்தது. குழந்தை வஞ்சிக்கு அதனைக் கொண்டுவந்து தர ஆசைப்பட்டேன். ஆகவே அவனை ஏவினேன்! பாய்ந்து ஓடி மான் குட்டியை அவன் துரத்திக் கொண்டே சென்றான். வேகமாக அவன் சென்றதிலிருந்து விரைவாகத் திரும்பிவிடுவான் என்று நம்பினேன். காத்திருந்தோம், நீண்ட நேரம் காத்திருந்தோம்! அவன் திரும்பி வரவே இல்லை! தேடி அவனைப் பார்க்கும்படி வீரர் மூவரை அனுப்பினேன்! காணவில்லை என்று அவர்கள் வந்து கூறிய

தும், ஏதோ ஓர்விதமான பயம்—இன்னது என்று எடுத்துரைக்க முடியாத ஓர்வித அச்சம்—என் நெஞ்சில் ஏற்பட்டது. நாங்கள் அனைவரும் காடு முழுவதும் சுற்றிச் சுற்றித் தேடினோம். கால்வலியும் மனச் சோர்வும் ஏற்பட்டதே அன்றி, தூயமணியை எங்களால் கண்டுபிடிக்க முடியவில்லை......”

மன்னனின் வார்த்தைகள் வர வர தடைப்பட்டு, சோகத்தில் தோய்த்தெடுத்தவைபோல் மெள்ள வெளிவந்தன. வஞ்சி தன் வேல் விழிகளில் வழிந்த கண்ணீரைத் துடைத்துக்கொண்டாள்! அவள் காதல் உள்ளம் பதறிக் கதறியது! அவள் கால்கள் சில்லிட்டு ஆட்டங் கண்டன!

“எங்கே சென்றிருப்பான்?”,

“உயிரோடு அவன் இருப்பான் என்றே எனக்குத் தோன்றவில்லை......”

இதைக் கேட்டதும் வஞ்சியின் தலை சுற்றியது. அதே இடத்தில் வாய்விட்டு அலறி அழா விட்டால் இதயம் பிளந்து விடும்போல் அவளுக்குத் தோன்றியது. தன்னை எப்படியோ சமாளித்துக் கொண்டு அவ்விடத்தை விட்டு தள்ளாடித் தள்ளாடி மேல்மாடிக்குச் சென்றாள்.

மலையினின்று விழும் அருவியைப் போல் மங்கையின் அகல விழிகளிலிருந்து கண்ணீர் கொட்டியது! தேம்பித் தேம்பி அழுதாள்! மலர்ந்த செந்தாமரையைப் போன்றிருந்த அவள் முகம், வாடி வதங்கி கருகி உதிர்ந்த மலர்போல ஆயிற்று! தேன்சுவை தன்னை நாடி வருவதைக் கண்டதும் அவள் அழுகை இன்னும் அதிகமாயிற்று.

“தேன் சுவை, என் வாழ்வு என்னாவது?” என்று துக்கத்தில் வடித்தெடுத்த வார்த்தைகளைக் கக்கினாள்? தேன் சுவையைக் கட்டிக் கொண்டு விம்மி விம்மிப் புலம்பினாள்.

“அழாதே வஞ்சி! ஆபத்து ஒன்றுமிருக்காது!” என்று ஆறுதல் கூறினாள் அவள் தோழி தேன் சுவை. அந்நிலையில் வெறும் சொற்களா அவளுக்கு ஆறுதல் அளிக்க வல்லன?

“பாவி நான் நேற்று மாலை பதட்டத்தோடு நடந்து கொண்டேனே! கலக்கமற்ற என் நடத்தையில் ஐயமும் அவர் கொள்ளும்படி துடுக்குத்தனமாக......”

“வஞ்சி, சென்றதை எல்லாம் எண்ணியெண்ணி ஏன் ஏக்கமடைகிறாய்! நான் சொல்கிறேன் கேள்..............”

“தேன் சுவை, கோபித்துக் கொள்ளாதே—இப்பொழுதே இவ்விடத்தை விட்டு நீ போய் விடு! நான் தனித்திருக்க விரும்புகிறேன்...........”

“உள்ளம் உடைந்திருக்கும் உங்களைத் தனியாக விட்டுச் செல்லக் கூடாது! துணையாக இருக்கும் நான் பக்கத்திலிருந்தால்தான்...”

“வாதாடி வாதாடி என் வருத்தத்தை அதிகமாக்குவதற்கு எளிதாக இருக்கும்! ஏனம்மா அப்படித்தானே உன் நினைப்பு! என்னை வதைக்காதே தேன் சுவை! சிறிது நேரம் என்னைத் தனியே இருக்க விடு!”

‘வஞ்சி”

“வெந்த புண்ணிலே வேலை நுழைக்காதே..... இரவு வந்து பார்!” என்று கூறி இளவரசி தன் முகத்தை மூடிக்கொண்டாள்.

வேறு வழியின்றி, விட்டுப்பிரிய மனமின்றி, தேன்சுவை அவ்விடத்தை விட்டு அப்புறம் அகன்றாள்.

அங்கிருந்த ஓர் ஆசனத்தில் சோர்ந்து வஞ்சி சாய்ந்தாள்! ஏதேதோ எண்ணங்கள் கன்னியின் உள்ளத்தில் மோதி மோதி அவளைக் கதிகலங்கச் செய்தன!

அரண்மனையின் தோட்டம்! இளம் உள்ளங்களைக் கூத்தாடச் செய்யும் மந்தகாசமான மாலை நேரம்! வஞ்சியும் தேன் சுவையும் மலர் கொய்து கொண்டிருந்தனர். மன்னன் விரும்பிய மூலிகை பறிக்க தூயமணி மலர் சோலையினுள் நுழைந்தான்.

பார்த்துவிட்டாள் வஞ்சி! அவள் நெடுநாளைய ஆசையைப் பூர்த்தி செய்துகொள்ள தக்க சமயம் இது தான் என்று யோசனை கூறினாள் தேன் சுவை!

தோழியை விட்டு தனியாகத் தூயமணி இருக்கும் இடம் நோக்கி நடந்தாள்! நின்றாள் அவன் அருகே!

“என்ன பறிக்கிறீர்?” என்று மெதுவாக வஞ்சி கேட்டாள்!

“அரசர் ஒரு மூலிகை வேண்டுமென்றார் ஆகவே இங்குவந்து...”

“பறித்துக்கொண்டிருக்கிறீர்—சரி! அந்த மூலிகையின் பெயர்?”

“பெயரைச் சொல்லக்கூடாது—ரகசியமான செய்தி!”

“உங்கள் உள்ளம் என்ன ரகசியம் குடிகொண்ட குகையா?”

“தாங்கள் என்ன சொல்கிறீர்?”

“தாங்கள்—நீங்கள் என்று அடிக்கடி இன்னும் எத்தனை காட்... ளுக்குத்தான் அர்த்தமற்ற சொற்... களால் என்னை அழைத்துக்கொண்டிருக்கப்போகிறீர் என்று கேட்கிறேன்......”

“புரியாமல் பேசுகிறீரே!”

வஞ்சி வேட்கை நிறைந்த பார்வையை அவன்மீது வீசினாள்! அவன் தலை குனிந்துகொண்டான்.

“இவள் பெண்தானா?” என்று வெறுப்போடு தனக்குத்தானே கூறிக்கொண்டான்.

மெதுவாக அவன் கரத்தை...

(5-ம் பக்கம் பார்க்க)


“முத்து”

குழந்தைகளே! முத்து உங்களுக்கு முத்து முத்தான கருத்துக்களைத் தரப்போகிறது

நீங்கள் முந்திக்கொள்ளுங்கள்!

1949 ஜூன் 3உ முதல் வெளிவரும்

விலை அரையணா

எங்கும் முன்பணம் கட்டும் விற்பனையாளர் தேவை.

முத்து, தபால் பெட்டி 39 புதுக்கோட்டை.


Edited, Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar at Free Printers 147, Coral Merchant St., Madras. Joint Editor, M. Ilancheliyan B. A. (Ho